# THE MADRAS LEGISLATIVE ASSEMBLY

## SEVENTH SESSION OF THE SECOND LEGISLATIVE ASSEMBLY UNDER THE CONSTITUTION OF INDIA.

**Monday, 31st August 1959.**

The House met in the Assembly Chamber, Fort St. George, at eleven of the clock, Mr .Speaker (THE HON. DR. U. KRISHNA RAU) in the Chair.

### I.—CONDOLENCE RESOLUTION.

**MR. SPEAKER :** இந்தப் புது சட்டசபைக் கூட்டத்திற்கு உங்கள் எல்லோரையும் நான் வரவேற்கிறேன்.

சட்டசபையின் கூட்டம் நீலகிரியில் முடிந்த பிறகு சில அங்கத்தினர்கள் இறந்துவிட்டார்கள் என்ற செய்தியை நான் மிகுந்த வருத்தத்துடன் உங்களுக்குத் தெரிவித்துக்கொள்ளுகிறேன். 1959-ம் வருஷம் மே மாதம் முதல் தேதி கனம் அங்கத்தினர் ஸ்ரீ ஏ. எஸ். சகஜாநந்தா இறந்துவிட்டார். இவர் இந்தச் சட்டசபையில் சிதம்பரம் தொகுதியைச் சேர்ந்த அங்கத்தினர். அவர் ஒரு காங்கிரஸ் தொண்டர். ஹரிஜன முன்னேற்றத்திலும் பொது ஜன சேவையிலும் ஈடுபட்டு நல்ல பெயர் வாங்கியவர். சிதம்பரத்திலுள்ள நந்தனார் கழகம் என்ற ஸ்தாபனத்தின் தலைவராக இருந்தார். தீண்டாமையை ஒழிப்பதற்குக் கஷ்டப்பட்டவர். ஒரு தமிழ் அறிஞர். அவர் 1926-ம் ஆண்டுக்குப் பிறகு இரண்டு தடவைகளில் எம்.எல்.சி.யாகஇருந்தார். 1936-ம் வருடத்திலிருந்து இந்தச் சட்டசபை அங்கத்தினராக இருந்தார். இறக்கும்போது அவருக்கு 69 வயது.

அடுத்தபடியாக கனம் எம். டி. ராமசாமி. அவர் அருப்புக்கோட்டைத் தொகுதியிலிருந்து இந்த சபைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு வந்தவர். அவர் இந்த வருடம் ஜூன் மாதம் 29-ம் தேதி இறந்துவிட்டார். அவர் தன்னுடைய தொகுதியாகிய அருப்புக்கோட்டையில் நல்ல வேலை செய்திருக்கிறார். அங்குள்ள நகரசபைத் தலைவராக ஐந்து வருஷங்கள் இருந்திருக்கிறார். பாராளு மன்றத்தின் அங்கத்தினராகவும் இருந்திருக்கிறார். அருப்புக்கோட்டைத் தொகுதியில் ஜனநாயகக் காங்கிரஸ் கட்சியின் சார்பாகத் தேர்ந்தெடுக்கப்பட்டு நல்ல பணியாற்றி வந்தார். இறக்கும்போது அவருக்கு வயது 55.

அடுத்தபடியாக கனம் சாமுவேல் நாடார். அவர் இந்த வருஷம் ஜூலை மாதம் 29-ம் தேதி இறந்துவிட்டார். அவர் தூத்துக்குடி தொகுதியிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டு வந்தவர். அவர் அங்குள்ள தொழிலாளர்களுடைய சங்கத் தலைவராக இருந்து அங்குள்ள மக்களுடைய அன்பைப் பெற்று இந்த சட்டசபைக்கு நடந்த தேர்த லில் வெற்றி பெற்று 1958-ம் ஆண்டு இங்கு அங்கத்தினராக வந்தார். தூத்துக்குடியில் ஹார்வி மில் தொழிலாளர் சங்கத் தலைவராக இருந்து ஹரிஜன முன்னேற்றத்திலும், சேரி ஒழிப்பிலும் சிறந்த வேலை செய்து வந்தார். இப்படிப்பட்ட தேசப் பணியில் நன்றாக ஈடுபட்டு வேலை செய்தார். அப்படி நல்ல வேலை செய்து நல்ல பெயர் வாங்கியிருந்தார். இந்தச் சட்டசபையில் கூட அவர் நன்றாக வேலை செய்தார். அது எல்லோருக்கும் தெரிந்த சமாசாரம். இறக்கும்போது அவருக்கு வயது 64.

இது மட்டுமல்லாமல் மேல் சபை அங்கத்தினர்களில் சிலர் இறந்துவிட்டார்கள். ஏப்ரல் மாதம் 30-ம் தேதி ஸ்ரீ கே. பாஷ்யம் இறந்துவிட்டார். இறக்கும்போது அவருக்கு வயது 77. அவர் விடுதலைப் போராட்டத்தில்

[Mr. Speaker] [31st August 1959

நல்ல பங்கு எடுத்துக்கொண்டு நல்ல பணியாற்றி வந்தார். 1937-ம் ஆண்டு அவர் இந்தச் சட்டசபை அங்கத்தினராக வந்தார். இவர் ஒரு மந்திரியாகக்கூட இருந்திருக்கிறார். 1946-ம் ஆண்டிலிருந்து அவர் நீதி மந்திரியாக இருந்து பணியாற்றி இருக்கிறார். இந்தச் சட்டசபைக்கு பல்கலைக் கழக அங்கத்தினராக தேர்ந்தெடுக்கப்பட்டு வந்தார். அவர் ஒரு பெரிய வக்கீல், நல்ல வழக்கு அறிஞர். தேசப் போராட்டத்தில் பங்கு எடுத்துக் கொண்டு நல்ல வேலை செய்துவந்தார்.

அடுத்தபடியாக ஸ்ரீ ஜான் ஆசீர்வாதம். அவர் மேல் சபை அங்கத்தினராக இருந்து ஜூன் மாதம் 30-ம் தேதி இறந்துவிட்டார். அப்பொழுது அவருக்கு வயது 55. பாளையங்கோட்டை, திருச்சி, மதருஸ் இந்த மூன்று இடங்களிலும் நல்ல வேலை செய்து கௌரவ நீதி பதியாக ஐந்து வருஷங்கள் வேலை செய்தார். ஆங்கிலோ—இந்தியர் பள்ளிக்கூடத்தில் ஆசிரியராக இருந்திருக்கிறார். ஒய்.எம்.சி.ஏ.யில் நல்ல வேலை செய்திருக்கிறார். க்ரைஸ்ட் சர்ச் ஹைஸ்கூலில் தலைமை ஆசிரியராக இருந்தார்.

மூன்றாவதாக ஸ்ரீ எக்னேஸ்வர சர்மா. இவர் ஜூலை மாதம் 23-ம் தேதி இறந்துவிட்டார். இவரும் தேச விடுதலைப் போராட்டத்தில் பங்கெடுத்துக் கொண்டு நல்ல வேலை செய்தார். அதனால் பல முறை சிறையில் இருந்தார். அகில இந்தியக் காங்கிரஸ் கமிட்டியில் அங்கத்தினராக இருந்து காதி விஸ்தரிப்பு திட்டத்தில் பங்கெடுத்துக்கொண்டும் ஹிந்தி பிரசாரத்தில் முக்கியமாகப் பணியாற்றியும் வந்தார். 1937-ம் வருஷம் சென்னை சட்டசபை அங்கத்தினராக இருந்தார். 1947–48-ல் எம்.எல்.சி.யாக இருந்தார். இறக்கும்போது அவருக்கு வயது 70.

கடைசியாக ஸ்ரீ கந்தசாமிப் பிள்ளை. இவர் ஜூலை மாதம் 25-ம் தேதி இறந்துவிட்டார். இவர் கூட ஒரு காங்கிரஸ் தொண்டர். ஹரிஜன முன்னேற்றத்திற்காகப் பாடுபட்டவர். அதில் நன்றாக வேலை செய்து வந்தார். இவரும் குடி ஒழிப்புத் திட்டத்தில் பாடுபட்டவர். 1947 முதற் கொண்டு 1952-ம் வருஷம் வரையில் அவர் இந்த சட்டசபை அங்கத்தினராக இருந்து பணியாற்றி வந்திருக்கிறார்.

இவர்கள் எல்லோரும் இறந்துவிட்டார்கள் என்பதை கனம் அங்கத்தினர்களுக்கு மிகுந்த வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்ளுகிறேன். இது சம்பந்தமான தீர்மானத்தை இந்தச் சபையின் முன் வைக்கிறேன். இதை கனம் அங்கத்தினர்கள் எல்லோரும் ஏக மனதாக அங்கீகரிக்க வேண்டும் என்றும் கேட்டுக்கொள்ளுகிறேன்.

This House places on record its deep sense of sorrow at the demise of Sri A. S. Sahajananda on 1st May 1959, Sri M. D. Ramasami on 29th June 1959, and Sri A. Samuel Nadar on 29th July 1959, Members of the Legislative Assembly, and conveys its deep sense of sympathy to the members of the bereaved families.

As an expression of sorrow, and by way of passing the resolution, I request the House to stand in silence for two minutes.

The resolution was carried *nem. con.*, all the members standing in silence for two minutes.

MR. SPEAKER : The House will now adjourn, as a mark of respect to the deceased, and meet again at one of the clock this afternoon.

**The House then adjourned.**

**The House reassembled at 1 p.m.**